Registered No. M. 1953.] [வருட சந்தா ரூ. 1—0—0

ஸ்ரீ ஆண்டவிநாயகர் துணை.

குணநிதி.

திருவிடைமருதூரினின்று வெளியாகும்
ஒரு மாதாந்த செந்தமிழ்ப்பத்திரிகை.

GUNA NIDHI.

மலர் 1.] இரக்தாக்ஷி-ஹு ஆவணி-மீ கவ [இதழ் 3.

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	கடவுள் துதி	... 49
2.	நிதி	... 50
3.	காழிக்கல் வெட்டுக்கள்	... 52
4.	தமிழணங்கின் சீர் குன்றக் காரணமென்ன?	... 54
5.	அறநெறி விளக்கம்	... 58
6.	நமது கடமை	... 60
7.	பத்திரிகையும் அதன், கடமைகளும்	... 61
8.	பெண் கல்வி!	... 63
9.	தாய்மொழியை வளர்த்தல்.	... 66
10.	நம்மாழ்வாரது திருச்சீர்த்தெண்டை	... 68
11.	சிவப்பிரகாசன்	... 70
12.	விசேஷக் குறிப்புகள்	... 72

பத்திராதிபர்
ம. சோ. [illegible] தேசிகர்.
திருவிடைமருதூர்.

அமரர் கி. அருணாசல முதலியார் அவர்களின் நினைவாக அன்பளிப்பு. அளிப்பவர்: திருமதி சியாமளா அருணாசலம் சீர்காழி. (1982)

...DAM...

"குண நிதி"

சந்தா விவரம்.

		ரூ. அ. ப.
வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட	உள்நாட்டிற்கு	1—0—0
	வெளிநாடுகளுக்கு	1—4—0
	தனிச் சஞ்சிகை விலை	0—2—0

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழுவிலாசத்தையும் எழுதியனுப்பல்வேண்டும்.

(2) சந்தா தொகையை முன்னர் அனுப்பியாவது வி. பி. யில் பணம் கட்டியாவது பெற்றுக்கொள்ளல்வேண்டும்.

(3) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம்மாதம் 15-ம் தேதிவரை பார்த்து அதற்குமேல் அதே தமிழ் மாத முடிவிற்குள் தெரிவித்தல்வேண்டும்.

(4) கடிதம் எழுதுங்கால் சந்தாதார் நம்பரைக் குறித்தல் நலம். பதில்விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபாற் முத்திரையாவது அனுப்பினாலன்றி விடையளித்தல் இயலாது.

ஆயுள் சந்தா.	உள்நாடு	ரூபா. 15—0—0
	வெளிநாடு	„ 20—0—0
வருடம் ஒன்றுக்கு	அபிமானிகளுக்கு	ரூபா. 25 0—0
	போஷகர்களுக்கு	„ 50—0—0

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு	ஒரு மாதத்திற்கு	ரூபா.	6—0—0
அரைப் பக்கத்திற்கு	„	„	3—8—0
கால் பக்கத்திற்கு	„	„	2—0—0

முன் பணம் இன்றி விளம்பரஞ் செய்யப்படமாட்டாது.

"குணநிதிப்" பிரசுரசாலை, திருவிடைமருதூர்.

ஸ்ரீ ஆண்டவிநாயகர் துணை.

குணநிதி.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"—திருக்குறள்.

(All Rights Reserved.)

மலர் 1 } இரக்தாக்ஷி-௵ ஆவணி-௴ ௧௬௳ { இதழ் 3.
1924-௵ ஆகஸ்டு-௴ 16௳

கடவுள் துதி.

திருச்சிற்றம்பலம்.

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
யடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
னடியார் நடுவு ளிருக்குமரு ளைப்புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ண முன்னின்றே.

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.

குணநிதி.

"நிதி"

நிதிபதி, தனதன் எனச்சிறப்பித்துக் கூறப்படுபவனும், வடதிசைப் பாலனுமான குபேரன் சங்கநிதி, பதுமநிதி என்னும் இருநிதியையுடையவனாயினும், அவன், "கல்வி, செல்வமென்னும் இருநிதிக்குரியராய்த் தம் கடமைகளை வழுவாது புரியும் மனிதரைப்போல்" அழியா இன்பத்தை அடையத்தக்கவனல்லனாகையால், அவன் அடைந்துள்ள இருநிதியும் நம் நிதிகளிற்றாழ்ந்தனவேயாம். குபேர செல்வத்திலும் மேலானவையாக நம் செல்வம் எண்ணப்படுவதற்குக் காரணம்; அவற்றையடைந்து உரியவழியில் அனுபவிக்கத்தக்க நம் மக்கட்பிறப்பேயாம். அது பற்றியே "அரிதரிது மானிடராதலரிது" எனப்பெரியாருங் கூறினர். தேவரும்விரும்பும் மானிடப்பிறப்பையுற்ற நாம் மிகச் சுருக்கமாய்ப்பெற்றுள்ள வாழ்நாளுள், அடையவேண்டிய செல்வங்களை அடைதலே அறிவுடையார்க்குக்கடமையாம். அச்செல்வங்களாகிய கல்வி,செல்வமென்னும் இரண்டுள் பெரிது எது என்னில் இரண்டும் சமமதிப்புடையவேயாம் என்பது சிலர் துணிபு. அவர் அங்ஙனம் கூறுதற்குச் செல்வத்தால் மனிதப்பிறப்பின் பயனாகிய முத்தியை அடைந்தாரும், அச்செல்வமின்றிக் கல்வியாலேயே அம்முத்தியை அடைந்தாரும் உளர் என்பதே.

அவ்வாறு சொல்லப்படினும், செல்வமுடையவர் கல்வியையும் உடையராணுற் புருஷார்த்தங்களுட் சிறந்த தர்மத்தையும் மோக்ஷத்தையும் அடைதல் கூடுமென்பதுபற்றி, "வறியாரிருமை யறியார்" எனவும், "முனிவருமன்னரு முன்னுவ பொன்னான் முடியும்" எனவும் ஸ்ரீமணிவாசகப் பெருந்தகையும் கூறியிருக்கின்றார். ஆயினும், "பொருட் செல்வம் பூரியார் கண்ணுமுள" என்றபடி கல்விச்செல்வமில்லாதாரிடத்

துள்ள பொருட்செல்வம் தன்னையுடையார்களுக்குப் பெரும் பயன் தருவதாயின்றி, "அரிசனம் பூசி.........ஒப்பார்" எனக் கூறியவாறு பல்வேறு இழிசெயல்களுக்கு ஆளாக்குதல்பற்றிப் பல்வேறு அறிஞர்களால் இழித்துக் கூறப்பட்டிருக்கின்றது.

மற்றைக் கல்விச்செல்வமோ என்னில், தன்னையுடையார்க்கு இம்மைக்கும், மறுமைக்கும், வேண்டிய எதையும் தருமியல்புடையதாய் இலங்குவதோடு, அப்பொருளாற் சிறந்த பெரியாரையும் கல்வியாற் சிறந்தார்க்குப் பணிவித்தலால், கல்விச்செல்வம் பொருட் செல்வத்தினும் மேன்மையுடையது என்பது வெள்ளிடை மலையாம்.

அத்துணைச் சிறப்பினையுடைய கல்வி, நான்முகத்தானேயே கற்றுக் கோடல் அரிதாதலின், அக்கல்வியோடொப்பக் கேள்வியும் பெரும் பயனுடையதாம். ஆனதுபற்றியே ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமானும், "கற்றல் கேட்டலுடையார் பெரியார்" என்றனர். திருவள்ளுவ நாயனார் "கற்றில னாயினுங்கேட்க வஃதொருவற்—கொற்கத்தி னூற்றாந் துணை" என்றனர். இக்கேள்வியின் மேன்மையைக் கூறப்புகின் மிகவிரியும். அன்றியும் அதன் நன்மையை அறியாதாருமரியர்.

இவ்வாறு பெரும் பயன் தரும் கேள்வியைப்பெறுதற்கிடமாவன:— சபைகளும், பத்திரிகைகளுமேயாம். அவற்றுட் சபைகள் நம் நாட்டில் அரிதாயிருத்தலால், அத்தகைய சபைகளில் அரியவிடயங்களை உபன்னியசிக்கத்தக்கபுலவர்பலருடைய அரிய பெரிய வியாசங்களைத் தம்பாற் கொண்டுவரும் பத்திரிகைகளைத் தம் நலத்தையும், தேச நலத்தையுங்கருதி, ஆதரிக்கும் அன்புடையார் அவற்றுள் ஒன்றுகும். இக்குணநிதியையும் ஆதரித்து, அதன் ஆக்கத்தில் அன்பு கொள்வார்களாக.

சுபம்!

பத்திராதிபர்.

காழிக் கல்வெட்டுக்கள்.

(31-ம் பக்கம் தொடர்ச்சி.)

சாஸனங்கள் குறித்திருக்கும் ஏடுகள்.

சாஸனங்கள் உலோகம், கற்பாறை முதலிய பொருள் மேல் வெட்டப்பட்டுள வென்றேன். இப்பொழுது 2 இருப்புத் தூண்கள் ஒன்று 23 அடி 8 அங்குலமுயரமுள்ளதாய் 6 டன் கனங்கொண்டதாய் அதன் மேல் கி. பி. 415-ல் இரண்டாவது சந்திரகுப்தவரசர் சமாதி சாஸனப்பாட்டு எழுதப்பட்டதாய் டெல்ஹிக்கடுத்த மேஹராலியிலும், மற்றொன்று இதைப்போல் 2 மடங்கு உயரமுள்ளதாய்ச் சிதைந்த நிலைமையில் மத்திய இந்தியாவில் தாரிலும் நிற்கின்றன. பாஞ்சாலதேசத்தில் ஸர் ஸூக்கடுத்த கங்கு என்னுமிடத்தில் புத்தஸ்தூபிகளிலிருந்து எடுக்கப்பட்ட பிரார்த்தனைக்காகக் கொடுக்கப்பட்ட தங்கத் தின்மேலெழுதிய ஒரு சிறு சாஸனம் இப்பொழுதகப்பட்டிருக்கிறது. கிருஷ்ணா ஜில்லாவில் பட்டிப்பிரோலு என்ற ஊரின் ஸ்தூபியிலிருந்து கிடைத்த வெள்ளித் தகட்டின்மேல் விளங்காத ஒரு சாஸனம் காணப்படுகிறது. இராவில்பிண்டி ஜில்லாவில் மாணிக்கியாலாவில் எடுத்த பிரதிஷ்டார்த்தமான ஸ்தூபியிலுள்ள உலோக பிம்பத்தின்மேல் ஒரு சாஸனங்காணப்படுகிறது. பித்தளையின்மேலெழுதப்பட்ட சாஸனங்கள் பலவுள. அவைகளில் முக்கியமானவை ஆப்கானிஸ்தானத்தில் வார்தாக்கில் ஸ்தூபியிலிருந்து அகப்பட்டு கி. மு. 6-ம் வருஷத்தில் எழுதப்பட்டிருக்கக்கூடிய குறிப்பு வெட்டுடன் உள்ள ஒரு பித்தளைப்பாத்திரம். (2) குப்தவரசர்களின் காலத்ததாகத் தோற்றும் சாஸனம் பதியப்பெற்ற ஒரு பித்தளை முத்திரை மோதிரம். (3) கயாவின் சமீபத்தில் எங்கிருந்தோ கொண்டு வரப்பட்ட பித்தளையாற் செய்த புத்தரின் ஒரு பிரதிபிம்பத் தடி. இப்பிம்பம் பிரார்த்தனைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. ஆணியின் தலைபோன்ற அக்ஷரரூபமுள்ளது. வெண்கலத்தில் முத்

திரையடித்த கருவிகள் சில அகப்பட்டுள. அவைகளுள் ஒன்று பிராமி, காராஷ்தி, கிரீக் என்னும் 3 பாஷைகளின் தெளிவான அக்ஷரங்கள் பொறித்தது. பெரும்பாலும் சாஸனங்களை வெட்டுவதற்குத் தாமிரத் தகடுகளே உபயோகப்பட்டன. ஐக்கிய மாகாணத்திலுள்ள கோராக்பூர் ஜில்லா சோஹ்காரா வென்ற ஊரில் சிறிய பழய சில குறிப்புகள் கொண்ட தகடுகள் $2\frac{1}{2}$ அங்குல நீளம் $1\frac{7}{8}$ அங்குல அகலமுள்ளன. அத்தகைய தகடுகள் $2\frac{1}{2}$ அடி சதுரம் வரையில் பஞ்சாபில் பஹவல்பூருக்கடுத்த சூவிஹார் என்ற ஊரில் கி. மு. 46-வருஷத்துச் சாஸனங்கள் அடங்கியவையும் பிறவுமாம். இவ்விதத் தகட்டுக் குறிப்புகள் பொதுவில் ஞாபகார்த்தமாகவும் பிரதிஷ்டார்த்தமாகவும் செய்யப்பட்டு அவற்றிற்குரிய ஸ்தூபிகளில் வைக்கப் பட்டுள. தாமிர சாஸனங்கள் பெரும்பாலும் தான சாஸனங்களாம். அவைகள் வெளிப்பட்டவுடன் தனிமையாய் அவரவர்கையில்அகப்பட்டுப் பத்திரமாய் வைக்கப்பட்டு வந்தன. ஆதலால் இப்பொழுதும் அத்தகடுகளை அவற்றிற்குரியோர்களிடத்தே தேட வேண்டும். ஆகிலும் சில தகடுகள் வயல்களிலும், சுவர்களிலும் கட்டடங்களின் அஸ்திவாரங்களிலும் புதைக்கப்பட்டுள. காலக்கிரமத்தில் இந்த இனம் குறிப்புகள் கைக்குக்கைமாறி ஊரூராகச் சென்று கடைசியில் நாணயங்கள், முத்திரைகள், எழுத்துவெட்டுள்ள கற்கள் இன்னும் மற்ற எளிதில் தூக்கிப்போகும் சாமான்கள்போல் எந்தவிடத்தில் அவைகளுண்டாயினவோ அந்த விடத்திற்கு வெகுதூரத்துக்கப்பால் அகப்படுகின்றன. இதற்கு ஒரு நல்ல உதாரணமாகப் பின் வரும் சமாசாரத்தைச் சொல்லலாம். கி. பி. 757-ம் வருஷத்தில் இரண்டாம் கீர்த்திவர்மன் என்ற மேற் சாளுக்கிய அரசன் ஷோல்பூருக்கு அருகு முகாமிருந்தபொழுது தார்வார் ஜில்லா சல்வியூரில் ஈகை பெறுவோனுக்குக் கொடுத்த நன்கொடை குறிக்கப்பட்டுள்ள தகடுகள் மைசூர் கோலார் ஜில்லாவில் வாக்கலேரியிலகப்பட்டன. அத்தகடுகளுக்கு இப்பொழுது வாக்கலேரித் தகடுகள் என்ற பெயர் வழங்கும். சாஸனத்தகடுகள் உருவம் பரப்பு இவற்றில் வித்தியாசப்பட்டு ஒன்றும் பலவுமாய் ஒருபக்கத்தும்

இருபக்கத்தும் எழுத்துக்கள் வெட்டப்பட்டுள்ளன. கி. பி. 733 முதல் 747 வரையாண்ட பல்லவமல்ல நந்திவர்மன் காசாக்குடி குறிப்புகளில் 11 தகடுகள்வரை உபயோகப்பட்டிருக்கின்றன. தகடுகள பலவாயின் அவைகளை எண்ணிட்டுத் துவாரஞ்செய்து தாமிர வளையங்களில் கோத்து வைப்பதும், அத்தகைய இனும் சாஸனங்களின் உண்மை நன்குபுலப்படும்படிராஜாங்கமுத்திரையின்பிரதியுற்பாதனங்கள்தாமிரத்திலாவது வெண்கலத்திலாவது செய்து அவைகளையும் அத்தகடுகளோடு சேர்த்துவைப்பதுவழக்கம். இத்திறத்தநேர் முத்திரையும், பிரதியுற்பாதமுத்திரையும், முத்திரை மோதிர ரூபமான ராஜ அடையாளங்களும் கீழ்நாட்டிலும் மேல்நாட்டிலும் முக்கிய உபயோகத்தைக் கொடுத்தன. இம்முத்திரை மோதிரமானது மஹாகவிகாளிதாஸர் எழுதியுள்ள 'சாகுந்தலம்' என்ற நாடகத்தில் மிகச்சாதுர்யமாகவொரு பெருங்காரியத்தையும், அவ்வாறே 'முத்திராராக்ஷஸம்' என்னும் நாடகத்தில் சாரணமந்திரியின் முத்திரை மோதிரம் வெகு காரியங்களையும் செய்தன. வேறுவழியில் உலகவிஷயமாகச் சில காரியங்களை இவை செய்யும். சீன யாத்திரிகரான ஹியான்சாங்குக்குக் கன்னோசிக்கும் தானேசருக்கும் அரசரான ஹர்ஷவர்த்தனர் வெண் பஞ்சுப்படாத்தில் சில கடிதம் எழுதித் தம் ராஜமுத்திரையிட்டு உறுதிப்படுத்திக் கொடுத்தார். இப்படி நம் அரசர்கள் மந்திரிகள் முதலியோர் முத்திரைகளில் சில கற்பித லிங்கங்களையும் சில ஆக்கியானங்களையும் மற்றவைகள் இவ்விரண்டினையும் பொருந்தப் பெற்றுள்ளன.

ப· அ· முத்துத்தாண்டவராயபிள்ளை·

தமிழணங்கின்

சீர் குன்றக் காரணமென்ன ?

(34-வது பக்கத்தொடர்ச்சி.)

இவர்களுக்குத் (வக்கீல் குமாஸ்தாக்களுக்கு) தமிழ் எழுத வேண்டிய முறை இன்னதெனத் தெரியாததால் 'இறந்தான்

என்று எழுதவேண்டிய விடத்தில் இரந்தான் என்பது போன்ற விபரீத அர்த்தத்தைக் கொடுக்கக்கூடிய எழுத்துக்களையுடைய சொற்களை உபயோகிக்கின்றனர். இதனைப்பற்றி நியாயமன்றங் களிலும் (கச்சேரி) ஏன் விசாரிக்கவில்லை யென்றாலோ, முன் கூறியபடி அம்மன்றங்களிலுள்ள லிகிதர்களும்(குமாஸ்தாக்கள்) இவ்வாறு சம்ஸ்கிருதமும் முற்றுப்பெறத் தெரியாமலும், தமிழைக்கற்காமலும், எஸ். எஸ். எல். சி. அதற்குமேலுள்ள வகுப்புக்களிற்றேறி உத்தியோகஞ்செய்பவர்களே. அவர்கள் நானு மறியாள் அவளும் பொய் சொல்லாள் என்பர். இவ்வாறு தமிழ் சரிவர எழுதப்படாமையினாலேயே பிழைமல்கிப் பெருகுகிறது. இதனை நீக்கத் தமிழ் தன்னிலை அடைய வேண்டுமானால், அரசாங்கத்தார் இப்படிப் பிழையுடைய பத்திரங்கள் மன்றங்களில் ஏற்றுக்கொள்ளக் கூடாதென்று ஒரு விதி அல்லது சுற்றுக்கடிதம் அனுப்பவேண்டும். அதற்கு முன்னர் ஒருவரும் கவனிக்க மாட்டார்கள். அன்றியும் மன்றங்களில் தலைமை வகிக்கும் தலைமை லிகிதருக்கும் நியாயாதிபதிக்கும் பிழையுடன் எழுதிய பத்திரங்கள் ஏற்க விடப்படக் கூடாதென் எழுதப்படல் வேண்டும். அன்றியும் மேலதிகாரிகளால் கண்காணிப்பும் வேண்டும். இவ்விதம் நடக்குமாயின் இவர்கள் இயற்றும் பிழைகள் வெகு சீக்கிரம் நீங்கி விடும்.

இனி மிராசுதாரர்கள், வியாபாரிகள் முதலான பெரியமனிதர்களிடம் கணக்கப்பிள்ளையாக அமர்ந்திருப்போரு மிங்ஙனமே தேர்ந்தவர்களாகையால் இவர்களும் இப்பிழைகளுக்கு ஆளாகின்றனர். தஞ்சாவூர் ஜில்லாவிலே ஒரு பெரிய மிராசுதாரின் கணக்குப்பிள்ளை தனது கிராமக் கணக்கில் குப்பான் இறந்ததற்கு, வீரன் இறந்ததற்கு நெல்லு இவ்வளவு, ரூபா இவ்வளவு என்று இம்மாதிரியே எழுதியுள்ளார். இக்குப்பான், வீரன் இக் காரியக்காரனுக்கு யாசகம் செய்தானா? அல்லது எஜமானனுக் குப்பிச்சையெடுத்தானா? என்பது விளங்கவில்லை. இவர்களுக்கு 4 கலம் 3 கலமும் இரண்டு ரூபாயுமே சம்பளமாகையால், இவர்கள் அதற்குமேற்றான் என்ன தெரிந்துகொள்ளப்போகின்றனர்?

தஞ்சை ஜில்லாவிலுள்ள ஒரு பெரிய மிருசுதாரிடம் வேலைக்குச் செல்ல வேண்டுமானால் போகிறவன் போகும்போதே ஓலையி லெழுத வேலியிலிருக்கும் முள்ளையாவது ஒடித்துக்கொண்டு போகவேண்டுமென்று சொல்வதுண்டு. இதனால் என்ன ஏற் படுகிறது. இக்கணக்கன் எவ்வளவு அறிந்தவனு என்பது தெளிவாகிறதல்லவா? இம்மாதிரியாகப் பிழை பெருக இட முண்டாகிறது.

இனி பள்ளிக்கூட மாணவர்களுக்கு ஏற்பட்ட பாட புத்த கங்களைக் கவனிப்போமாயின் அவைகள் சரிவர, பிழையற, சொற்சோர்வு படாமல் எழுதப்பட்டனவாகத் தெரியவில்லை, முதலாவதாக யுனிவர் சிட்டி என்னும் பல்கலைக்கழகத்தினர் வெ ளியிட்ட வாசகநடையை ஏத்து ப்ரதானி, மந்த்ரீ, ப்ரபை, ப்ரசங்கம், நிக்ரஹம், என்றற்றொடக்கத்தனவான தமிழியலுக்கு மாறான மெய்முதலாகவரும் மொழிகள் வழங்கத் தலைப்பட்டி ருக்கின்றன. பல்கலைக்கழகத்தார் ஒருகால்

பன்னீருயிரும் கசதநபமவய
ஞஙவீரைந்துயிர்மெய்யுமொழி முதல்

என்ற நன்னூற் சூத்திரத்திலுள்ள உயிர்மெய்யென்பதை மறந்து மெய்யெழுத்தென்று மயங்கினரோ, அன்றிப்புதியனபுகுதலும் வழுவலகால வகையினான் என்று எண்ணினரோ அறிகிலேன். எவ்வாறாயினும் இவர்கள் விடுத்த கட்டளையைச் சிரமேற் கொண்டனர் காலஞ்சென்ற திருவன் செல்வகேசவராயமுதலி யார்போன்றோரெனின் மேற்கூறுவதியாதுளது? இப்படிப் பட்ட சொற்கள் பயிற்சியில் வரவே அவரவர்கள் தோன்றியபடி எழுதத் துவக்கிவிட்டனர். மொழியியலும் தன்றிறம் திரும்பி னைத்தபடியெல்லாம் செல்லவாரம்பித்து விட்டது. வரம்பு கடந்துவிட்டால் திட்டேது தட்டேது; முகம் வைத்தவாக் கெல்லாம் செல்லவேண்டியதுதானே. புத்தகங்களும் நாகரிக முயசிற்யின்பயனாகத் தோன்றும நவீனங்களென்னும் நாவல் களும் இச்சொற்களே மலிந்துவிட்டன. அவைகளே பழகி

விடுகின்றன. நாளடைவில் பழந்தமிழ்ச் சொற்களின் உரு மாறியும் சிதைந்தும் புதைந்தும் விடுகின்றன.

ஆயினும் பெருங்கதை, சிந்தாமணிபோன்ற நூல்களில் பல சொற்களைக் காண்கிறோமே. அவைகளின் வழக்கு வீழ்ந் ததோடு பொருளும் விளங்காமலிருக்கின்றனவே யெனின், உண்மைதான். அக்காலத்திலிருந்து சிலகாலம் வரையிலும் பிற்காலசோழவசரர்கள் தோன்றுவதற்கு முன்னும் தமிழின் நிலை சரிவரத்தெரிந்து கொள்ளும்படியான நிலையிலில்லை. இதே மாதிரியாக ஐரோப்பிய சரித்திரத்திலும் ஓர் காலம் இருள் காலமென்கின்றனர். அக்காலத்திய விடயங்கள் ஒன்றுமே விளங்கவில்லை. அதுபோன்று நமக்கும் இந்த இடைப்பட்ட காலத்தில் தமிழின்றன்மையும் மொழியின் நடையும் விளங் காமல் கலக்கமுறுகிறோம். இவ்விடைப்பட்ட காலம் பல்லவ வாசர்கட்குட்பட்ட காலமாகும். இவர்கள் தமிழைப் புறக் கணித்தா விருப்பார்கள்! இருக்கக்கூடிய நெறி ஒன்றையும் காணோமாயினும் அவர்கள் காலத்தில் தமிழிற்கு ஒருவித ஏற்ற மிருந்ததாகக் காண்கிறோமில்லை. அவர்கள் காலத்து கல்வெட் டுக்கள் கிரந்த எழுத்துக்களாலும் வேறு மொழிகளாலும் வெட்டப்பட்டிருக்கின்றன. பிற்காலத்திய சோழவரசர்கள் காலத்திற்றோன்றிய கவிச்சக்ரவர்த்தியாம் கம்பன், புகழேந்தி, ஒட்டக்கூத்தர், சேக்கிழார், அருணந்திபோன்றோர் இருந்தா ர்களென்றுவது கேட்கலாமல்லவா. எழுத்திவ் வேறு மாதிரி யாகவும், புலவர்களுமில்லாம விருக்குமாயின் அக்காலத்தில் தமிழ் தன் பெருமையிற் குறைவடைந்த தென்பதிற் றடை யென்னே?

தொடரும்.

இலக்கண விளக்க பரம்பரை

திருவாரூர். சோமசுந்தரதேசிகர்.

அறநெறி விளக்கம்.

(36-வது பக்கத்தொடர்ச்சி.)

பாசவறத்தால் பாசவின்பமாகிய இவ்வுலகவின்பமும், பசுவறத்தால் பாசவின்பமாகிய இம்மையின்பமும, பசுவின்பமாகிய சுவர்க்காதி லோகங்களிற் சென்றனுபவிக்கும் மறுமை இன்பமும்,பதியறத்தா லிம்மையின்பமும் மறுமையின்பமும், மும்மையின்பமாகியமுக்தியின்பமும் கிடைத்தல் திண்ணம். ஆகையால் பதியறமே மற்ற வரங்களேயும், அவற்றலாய இன்பங்களேயும், அழியாப்பேரின்பமாகிய முக்தி இன்பத்தையும் பயக்கவல்லதாம். ஆகலின் இம்மை மறுமை மும்மைப் பயன்களாகிய போக மோக்ஷங்களே விரும்பும் யாவரானும் அவசியம் செய்தற்பாலது பதியறமாகிய குருலிங்க சங்கம வழிபாடுகளேயாம். அவ்வழிபாடுகளினும் சங்கம வழிபாடாகிய மகேச்சுர பூசையே சிவசாயுச்சிய முக்தியை மிகவெளிதிற் பயக்கவல்லதாம். எங்ஙனமெனின் அதனே உதாரணமுகத்தால் நன்ருய் விளக்கிக் காட்டுதும். சிவமே, ஒருபசு அப்பசுவிற்குத் திருமேனியே குரு, திருமுலேயே இலிங்கம், திருமுகமே சங்கமம், அச்சிவமாகிய பசுவைப் பேணி அருளாகிய பாலேக்காந்துண்டு பேரின்பமுக்தி பெற்றுய்ய விரும்புவோர் அச்சிவமாகிய பசுவைச் சங்கமமாகிய முகத்தால் தம் பொருள்களாகிய புற்களே யூட்டிக்குருவாகிய திருமேனியை வளர்த்துப்பேணி இலிங்கமாகிய முலேயில் நின்றும் அருளாகிய பாலேக்காந்துண்டு பேரின்பமாகிய முக்தி பெற்றுய்வர். இஃதுணராதார் தம் பொருள்களேச் சங்கமங்களாகிய முகத்தே கொடுத்து எளிதில் முக்தி பெற்றுய்தலே விட்டுக் குருலிங்கமாகிய உடம்பு முலேகளிலே கொடுத்து முட்டுண்டு தட்டுத் தடுமாறி வருந்தி வாளா மாய்வாரென்றுணர்க. எவ்வாறு பசுமுகத்திற் கொடுத்த புற்களே யாவலாயுண்டு உடம்புவரைப் பூரித்து முலேயினின்றும் பாலேத்

தடையறப் பொழிந்து புற்களூட்டியோனுக்குப் பேரின்பத்தைக் கொடுத்தல்போலச் சிவமாகிய பசுவும் சங்கமமாகிய முகத்திலே தம் பொருள்களாகிய புற்களையூட்டி வழிபடுவோருக்குக்குருவாகிய திருமேனி வளரப்பூரித்து இலிங்கமாகிய முலையினின்றும் திருவருளாகிய பாலைப் பொழிந்து பேரின்ப முத்தியீந்திரட்சித்தாளுமென்க. ஆதலின் பதியறத்திற் சிறந்த சங்கம வழிபாடே சிவானந்தானுபூதிச் செல்வத்தை எளிதிற் பயக்கவல்ல சிந்தாமணி போன்றதாகும். இக்கருத்துப்பற்றியே நமது குலதெய்வமாகிய சமயாசார்ய சுவாமிகளும் தம்மால் வெளியிட்ட தேவார திருவாசகங்களிலே

"திருமூலட்டானம் புலம்பலம்பாவரு தொண்டருக்குத்
தொண்டராம் புண்ணியமே"—எனவும்

"அத்தா வாலங்காடா உன்னடியார்க் கடியேனாவேனோ"
எனவும். திருத்தொண்டத் தொகையில்

"அல்லிமென் முல்லையந்தாமர் நீதிக்கடியேன்
ஆரூரனாரூரி லம்மானுக்காளே" எனவும்

"அன்னவனுமாரூரனடிமை கேட்டுவப்பார்
ஆரூரிலம்மானுக்கன்பராவாரே" எனவும்

"அடியே னின்னடியார் நடுவுளிருக்கு மருளைப்புரி
யாய் பொன்னம்பலத்தரசே" எனவும்

"அடியார் கூட்டங் காட்டாயேற் செத்தே போனாற்
சிறியாரோ எனவும்

"மேவினோ மவனடி யாரடியாரோடு மேன்மேலுங்
குடைந்தாடி யாடுவோம்" எனவும்

திருவாய் மலர்ந்தருளியதுமன்றி நாமெல்லா முணர்ந்துய்யத் திருவீழிமிழலையிற் படிக்காசு பெற்றுத்தம்முடன்வந்த திருக்கூட்டத்தார்கள் களிக்க மகேசுபூசை செய்தருளிய தூஉம்.

(தொடரும்)

தரு. ஞா. சண்முகத்தம்பிரான்.

வேலூர்

நமது கடமை

(38-வது பக்கத்தொடர்ச்சி)

நாம் எடுத்த இவ்வுடலானது நமது பஞ்சகர்மேந்திரியங்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி முதலியவற்றின் ஒவ்வொன்றினுலும் ஈசுவரனது பரம கல்யாண குணங்களை வாயாரச் சொல்லித் துதிக்கவும், அவரது திவ்ய மங்கள விக்ரகங்களைக் கண்ணாரக் கண்டு தரிசிக்கவும், பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்யவும், அவரது புகழைக் கேட்கவும், எப்பொழுதும் அவரைப் பூஜிக்கவும், அவருக்குத் தொண்டு செய்யவுமே நமக்கு அளிக்கப்பட்டிருப்பதால் அவற்றிற்கு மாருக இதர வியவகாரங்களில் செல்லவிடுதல் தவறேயாகும். சுயநலமாக ஒன்றையும் கருதாது, அவரிடம் அத்யந்த அன்பு வைப்பதே உத்தம பக்தியாகும். இன்ன காரியம் கைகூடினுல் இன்ன பிரார்த்தனை செலுத்துகிறேனென்று பிரார்த்தனை செய்து காரியம் கைகூடிய பிறகு பிரார்த்தனை செலுத்துவது பக்தியாகாது. ஆபத்து வந்தவுடன் ஈசுவரனை நினைத்துப் பிரார்த்தனைகளைச் செய்துகொண்டு அவற்றை நிறைவேற்றுவதும், அது நீங்கியவுடன் அவரை அடியோடு மறந்துவிடுவதுமாக இராமல், நான் உன்னை யடையவேண்டுமென்ற ஓரே பிரார்த்தனை செய்துகொண்டு, அவனது பாதாரவிந்தங்களை விட்டு அகலாத சிந்தையோடு பக்தி செய்தல் வேண்டும்.

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா நின்னடி என்மனத்தே
வழுவா திருக்க வரந்தரவேண்டு மிவ்வையகத்தே"

என்றார், திருநாவுக்கரசு நாயனரும். இத்தகைய பக்தியினலேயே நாம் ஈசுவரனுடைய கிருபையைப் பெறலாகும். எப்பொழுது அவரது கிருபையை அடைந்து விட்டோமோ அப்பொழுதே பிறவிப்பிணியும், அதனல் வருந்துன்பமும், நம்மை

விட்டு நீங்கி விடும். ஈசுவரன் நித்யமான பேரின்பத்தை யளித்து நம்மைக் காப்பாற்றுவார்.

ஆகையால் இப்பொழுது நாம் அடைந்திருக்கும் உத்தம மான மனித ஜன்மத்தை இமைப்பொழுதும் வீணுக்காமல் பக்திமார்க்கத்தில் ஈசுவரனை வழிபட்டு நித்யானந்தத்தை யடைவதாகிய நமது கடமையை நிறைவேற்றுமாறு ஈசுவரன் அருள் புரிவாராக.

E. K. கிருஷ்ணமூர்த்தி அய்யர்.

பத்திரிகையும், அதன் கடமைகளும்.

இலை யென்னும் பொருளைத்தரும் பத்ரிகா என்னும் வட மொழி, பத்திரிகை யெனத்தமிழில் திரிந்து வழங்குவதாயிற்று. பத்திரிகை யென்பது பல்வேறு மரங்களின் இலையையும் உணர்த்துமேனும் அறிவின் வல்லார் தம் கருத்தை வரிவடி வினமைத்தற்கு முற்காலத்தில் சாதனமாயிருந்த பனையினிலை யையே உணர்த்தும். இப்பொழுதோவெனில் அவ்விலையைப் போலும் தகடாகாரத்தையும பெரியார் அபிப்பிராயங்களையு முடையனவாகிய கடிதங்களுக்கு உவமையாகு பெயராய் வழங்கி வருகின்றது. இப்பத்திரிகைகளில் ஒரே விஷயத்தை யோ, சரிதத்தையோ, அபிப்பிராயத்தையோ வரிசைக்கிரம மாகச் சொல்வனவற்றிற்கு நூல் என்றும் அவ்வப்போதுதோன் றும் அரிய பெரிய பல விஷயங்களைச் சமாசாரக் கடிதம் போற் சொல்வனவற்றிற்குப் பத்திரிகை என்றும் பெயர்கள் வழங்கு கின்றன.

இவ்விரண்டுள் பின்னர்க் கூறப்படும் பத்திரிகையானது இளமை தொடங்கிக் கற்க வேண்டியவற்றை முறையே கற்று, அவற்றின் பொருளுணர்ச்சிக் கேற்ற ஒழுக்கத்தையுமுடைய பெரியாரும் அம்முறையிற் கல்லாது சிறுகல்வியையுடைய

சாமானியருமாகிய எல்லோருக்கும் பெரும்பயனைத் தருவதா யிருத்தலின் இது இக்காலத்தில் மிகப்பரவுதலுற்றிருக்கின்றது.

உலகமுழுதும் பெரு நன்மை தருவதென நன்கு மதிக்கப் படும் ஒரு பத்திரிகையானது தான் செய்யவேண்டியதெனக் கொண்டிருக்கும் கடமைகள் யாவை? என ஆராய்வோமாயின் அளவிடற்கரியவேயாகும். ஆயினும் ஒருவாறு தொகுத்துக் கூறலாமென்னுந் துணிவாற் சிறிதாராயலாம்.

1. தேசக்ஷேமத்திற்கு இன்றியமையாதமுதற்சாதனமாயுள்ளவை, மழை, காற்று, வெயில், என்பனவாகலின் அவற்றை மிகாதும், குறையாதும் தரவல்லவர் மனிதருள் ஒருவருமில்லை. யாகலின் அவ்வாற்றலும் பிறவாற்றலும் உடைய கடவுள் வழிபாட்டின் அவசியத்தை அறிவுறுத்தல்.

2. புறத்தே புலப்படும் இயல்புடையரல்லாத கடவுள் போல் புறத்தே தோன்றித் தக்கன செய்யின் உவந்து, தகாதென செய்யிற் தண்டித்து மனிதர்களைத் துன்பத்தினின்றும் காப்பாற்றுபவன் அரசனேயாகலின் அவ்வரசனிடத்து நீங்காத அன்பை (ராஜபக்தியை) வளர்த்தல்.

3. கடவுள், அரசர் முதலாயினருடைய இயல்பு இஃதெனப் பலநூல்களையும் நூற்பொருளையும் கற்றுக் கேட்டு வல்லராய பெரியரே இவ்வுலகத்து மாந்தர் அறிவின் மிக்கராதற்குக் காரணராயிருத்தலின் அப்பெரியார்பால் அன்பை வளர்த்தல். இப்பெரியாரில் பெற்றோரும் அடங்குவர்.

4. கல்வியின் பயனையும், கேள்வியின் பயனையும் விளங்கக் கூறி எங்கும் கல்விச் சாலையையும் கேள்விச்சாலையையும் பெருக்க ஊக்குவித்தல்.

5. கல்வி முதலியவற்றின்பயன் ஒழுக்கமேயென்பதைத் தெரிவித்து எல்லோரையும் நல்வழியில் நடத்த முயலுதல். இதில் பொய் சொல்லாமை, கள்ளுண்ணாமை, பிறர் பொருள் விரும்பாமை யெல்லாம் அடங்கும்.

6. பலதேசத்தின் இயற்கையமைப்பாகிய பூமிசாஸ்திரம, பலமன்னர் சரிததிரமாகிய தேச சரித்திரம், இயற்கைக்கு மாறுதலாகததோன்றும அதிசயங்கள், ஆகிய இவற்றையறிவுறுத்தல்.

7. வாழ்நாளைக் கழித்ததற்கு வேண்டும் பொருளையடைதற்கான விவசாயம், வியாபாரம், கைத்தொழில் ஆகிய இவற்றைக்குறித்துப் பலவுதாரணங்களால் விளக்குதல்.

8. மனிதவாழ்க்கைக்கு இன்றியமையாதன தேகதிடமும், சுகமுமேயாகலின் அவைகுன்னிலயிலிருத்தற்கு அனுஷ்டிக்க வேண்டிய முறைகளைப் பலவழியாற் காட்டுதல்.

9. மேற்சொல்லியவற்றை யெல்லாம் பெற்றிருப்பினும் பரோபகார குணமில்லையேல் பயனற்ற வாமாகலின் பரோபகார சித்தத்தையும் அப்படியேவளர்த்தல் இதில்ஜீவகாருண்யமும் அடங்கும்.

மேற்சொல்லிய இவ்விஷயங்களையறிந்து கைக்கொண்டு ஒழுகும் ஒருவன் இவ்வுலகத்திலிருக்கும் மனிதருள் உத்தமோத்தமபுருஷனுய் மேனிலத்தும் நன்கு மதிக்கப்படும் கடவுள் போலாவானுகையால் இவ்விதம் தம் கடமைகளையறிந்து நல்வழியில் வேலைசெய்கின்ற பத்திரிக்கைகளின் வளர்ச்சி மிகப் பலவாகுமாறு எல்லாம்வல்ல இறைவன் அருள் புரிவாராக.

N. பரமசிவ ஐயர் B. A., L. T.

பெண் கல்வி.

நம்மதத்திற்கேற்ப நமது சம்ப்ரதாயமான நடவடிக்கைகளுக்கு வழுவின்றி அப்யசித்துவந்தால், தக்க அறிவையடையஏதுவாக இருக்குங்கல்வியை நம்மாதர்கள் பயிலல் வேண்டும். பூர்வகாலத்து, ஒளவை பிராட்டியாரும், மங்கையர்க்கரசியாரும், காரைக்கால் அம்மையாரும், மற்றுமுள்ள கற்பரசிகளான

மாதர்களும் கல்வியில் தேர்தசியுள்ளவர்களாகவே யிருந்திருக்கின்றார்கள். ஆகையால், பெண்களுக்குக் கல்வி அத்யாவசியமானதென்றே புலப்படுகின்றது. ஆதலின், நம்மாதர்கள் எவ்விதமான கல்வியில் தேர்ச்சி உடையவர்களாகச் செய்ய வேண்டும் என்பது பற்றி ஆராய்வம்.

நம்மாதர்கள் விவாகமாகித தன் கணவரோடுஇல்வாழ்க்கையைச்செவ்வனே நடையுறச்செய்வதற்கான கல்வியைக் கற்கச் செய்தலேயாம். இதனை அறியாது பலர் தம்மாதர்களுக்குத் தாளமேளத்துடனே ஆடுதற்குரிய சங்கீதப் பாடல் வரிசைகளையும், உலோகப்போக்கான சரித்திரங்களையும் படிக்கச்செய்கிறார்கள். ஒருசிலர் நாலெத்துப்பேர் தெரிந்தாற்போதும் என்றும கருதுகிறார்கள். மற்றும் சிலா பாசிமணி கோர்த்தல், பூநூற் செய்தல், தையல வேலை முதலிய கைததொழில்கள் செய்தல் தெரிந்தாற்போதுமென்றும கருதுகிறார்கள். மேற்கூறிய கல்வியிற் சிறந்ததெனக் கருதி தற்போதுள்ள பெண் பாடசாலைகளிலே, தையல முதலியவற்றில தேர்ச்சி அடையும் படிச்செய்கிறார்கள். அதுவோ, நம்மாதர்களுக்கு அவசியமாகததோன்றவில்லை. ஏனெனில் இவர்கள் தங்கள் உடையை உடுத்திக்கொள்ள வேண்டியதேயன்றி, மேல்நாட்டு ஸ்திரீகளைப் போல் பலசுருக்கஙகளை வைதது அமைத்த பாவாடைபோன்ற உடைகளை எப்போதும் அணிந்து கொள்ளாமையாலேயாம். ஆனல், சிலர் சேலை இரவிக்கை முதலியவை கிழிந்தால், தைக்கத்தெரிந்துகொள்ள வேண்டாமோ என்பார். அதற்காகக்கலாசாலைகளுக்குப் போய் தெரிந்துகொள்ள வேண்டுவதில்லை. இஃதோ கண்பார்த்தால் கை செய்துவிடும். இதற்காக அவசியமான குடும்பக்காரியங்களையே கவனியாது ஊசியும்கையுமாகத்தெருக்கள்தோறும் திரியவேண்டுவதில்லை. சிலர்பாசிமணியும் கையுமாயிருந்து கோர்த்து வருவதால் அடையும் பாக்கியம் யாதோ? அன்று, ஊசியும் கையுமாயிருந்தால் அவர்கள் பெறும் ஊதியம் யாதோ?

மேலும் சிலர் தங்கள் பெண்களைக் கிருஸ்துவப்பாடசாலைக் ளுக்கு அனுப்புகிறார்கள். அவர்கள் அம்மதக் கிரந்தங்களை அறிந்து, தற்கால நாகரீக உடைகள் பலவற்றைத் தரித்து, அவர்களில் தாமும் ஒருவராகப் பாவித்து, அக்கிரந்தத்தாலான பல பாடல்களைப்பாடி நடிக்கக் கற்றுக்கொள்ளுகிறார்கள். அப்பாடலோ மேனாட்டார்கள் தங்களது விசேஷ தினங்களில் விசேஷ பானாதிகளைச் சாப்பிட்டு அதன் வெறியோடு ஆண் பெண் என்றவித்தியாசமின்றிக் கூத்தாடி நடிக்கும் நடனமாம். இந்நடனத்தைப் பயின்ற பயன் யாதோ? உலகப்போக்கான பலகதைகளைப்படிக்கச்செய்வோமென்றால், நம்மாதர்களுக்குப் படிக்கும் காலமோ மிகச் சொற்பம். அதற்குள் பல நீதிகளையும் அறியச் செய்யவேண்டுமென்பதுபற்றியே, அவ்வாறு பயின்று வருவதற்கோ காலமில்லை. ஆகையின் அதுவும் பயனில்லை. ஆனால் நாலெழுத்துப் படிக்கத் தெரிந்தாற் போதும் என்போரின் கூற்றை யோஜிக்கில், அரைப்படிப்பு அனர்த்தம் என்றபடி கர்வத்தை உண்டாக்கி இழிந்த நிலையிற் சேர்த்து விடும். அத்தடிப்பை நீக்கவோ புடம் போட்டாலன்றிமுடியா. இஃது ஆணானாலும் சரி, பெண்ணானாலும் சரி.

ஆதலால், நம்மாதர்கள் குடும்பக்காரியங்களை எச்சரிக் கையோடு தக்கவாறு கணவனிடத்து மந்திரியைப் போல் அறிவித்து நடத்தவும், தன் கணவன் விருப்பின்படி ஆகாராதிகளைச் சேகரித்து, தாயைப் போல் உபசரித்து உண்ணச்செய்யவும், தன் நலத்தை நாடாது புருடன் விருப்பப்படி நடந்து திருப்தி செய்யவும், குடும்ப விருத்தியை நாடும் தன்மை உடையவராகவும் ஆகத்தக்க அரிய நீதியமைந்த பாடங்களைக் கற்றுக் கொடுக்கச் செய்து, தற்கால நாகரீகத்தில் புத்தியைச் செலுத்தி வேற்றுமை யின்றிக் கொண்டுள்ள சில பழக்க வழக்கங்களையும் திருத்த முன்வருவார்களாக.

பா. மகாலிங்கம்.

தாய்மொழியை வளர்த்தல்.

(44-வது பக்கத்தொடர்ச்சி.)

தமிழ்மொழியின் தோன்மையும், மேன்மையும்.

செந்தமிழாம் தெய்வமணங்கமிழும் நமது தாய்மொழியோ பலவாய அரிய கருத்துக்களையும் எளியநடையில் எவர்க்கும் இனிது விளங்கும் வண்ணம் எடுத்துரைக்கும் ஆற்றலை இயற்கையிலேயே பெற்றிருக்கின்றது என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. அன்றியும், அது, நமது பண்டைக்கால வழக்கவொழுக்கங்களை மரபுநிலைதிரியாது எவரையும் இனிது உணர்ந்து கொள்ளச்செய்யவல்லதும், பிறமொழிகளுக்கில்லாத சில சிறப்புக்களுடன் கூடியதும், நவிலும்தோறும் புதுபுதுக்கருத்துக்களைத் தோற்றுவிப்பதும் ஆகிய தொல்காப்பியம் முதலிய பல திறப்பட்ட இலக்கணநூல்களையும்; இயற்கையின் வனப்பை இற்றெனத் தெரிவிக்கத்தக்கனவும், பண்டைப்புலவர்கள் அரசர்கள் வீரர்கள் வள்ளல்கள் முதலாயினோருடைய அரிய சரித்திரங்களை வரலாற்றுமுறையுடன் அறியத்துணைசெய்யக்கூடியனவும் ஆகிய நற்றிணை, பத்துப்பாட்டு முதலிய சங்கத்தொகை நூல்களையும்; விரிந்த பலவாய உயர்ந்த கருத்துக்களை மிகச் சுருங்கிய தொடர்மொழிகளால் எவர்க்கும் எளிதில் விளங்குமாறு எடுத்து இடித்து உரைக்கவல்லதும், படிக்குந்தோறும் இன்பமூட்டிப் பண்படுத்தி உலகினருக்குப் பயன்படுமாறு படிப்போரைப்பக்குவப்படுத்தி வருவதும் வடமொழி ஆங்கிலம் முதலிய பல மொழியாளரும் மொழிபெயர்த்துக் கொள்ளும் பெருமையினைப்பெற்றதும், எம்மதத்தினரும் தம்மதத்தினது எனப்போற்றத்தக்க சமநோக்குள்ளதும் ஆகிய திருக்குறள் போன்ற பல நீதி நூல்களையும்; புதுப்புதுக்கற்பனைகள் நிறை

யப்பெற்ற சிந்தாமணி, இராமாவதாரம்போன்ற பல பெருங் காப்பியங்களையும், உள்ளதை உள்ளவாறுகூறிக் கற்போரை இன்புறுத்தும் சிலப்பதிகாரம், தொண்டர்புராணம்போன்ற தனித்தமிழ்ச் சரிதநூல்களையும்; சிந்தைக்கினிய செவிக்கினிய ஆகவும் 'வந்த இருவினைக்கு மாமருந்து' ஆகவும் உலகினராற் பெரிதும் போற்றப்படுவனவும், படிக்குந்தோறும்படிப்போரை உளங்கனிந்து நெக்குருகி மயிர்க்குச்செறிந்து ஆனந்தக்கண்ணீர்சொரியும் வண்ணம் செய்துவருவனவும், பத்திச் சுவை நனி சொட்டச்சொட்டப் பெருக்கெடுத்து வெள்ளம்போல் ஓடுகின்றனவும் ஆகிய தேவாரம், திருவாசகம், நாலாயிரப்பிரபந்தம், திருவருட்பாப்போன்ற அருளிச்செயல்களாகிய அன்பும் அருளும் நிறைந்த பல துதிநூல்களையும்; இலக்கணங்களையும் காப்பியங்களையும் பிறவற்றையும் கற்றற்குத்துணையாமாறு பலவகைப்பட்ட அரிய முடிபுகளையும், கருத்துக்களையும் தம் மகத்துக்கொண்டு, எவர்க்கும் இளமையிலேயே அவை யிற்றை வாலாற்றுமுறைப்படி எளிதிற் புகட்டவல்ல பெருமையினையுடைய சிவப்பிரகாசர் பிரபந்தத்திரட்டு, சொட்டுஞ்சுவையார் அட்டப்பிரபந்தம் போன்ற பல சிறு காப்பியங்களையும்; தண்டமிழ் மூதாட்டியாம் ஔவையின் பலதிறப்பட்ட அருளிச்செயல்களையும்; பலவான ஞான நூல்களையும், மருத்துவ நூல்களையும், ஜோதிட நூல்களையும்; பிறமொழிகளிலுள்ள அரிய பெரிய கருத்துக்களைத் தன்பால் மொழிபெயர்த்துச்சேர்த்துக் கொள்ளத்தக்க சொல்லாற்றலினையும் பெற்றிருக்கின்றது. அன்றியும், அது தன்னைத் தாய்மொழியாகக் கொண்ட ஓர் அரசரையும்; பலஜமீன்தார்களையும்; பலமடாதிபதிகளையும்; பல நூறுபெரும் பொருளாளர்களையும்; சற்றேறக்குறைய இருநூறு லட்சம் மக்களையும்; பலதர்மஸ்தாபனங்களையும்; பலகழகங்களையும்; பல ஸ்தல சுயஆட்சிஸ்தாபனங்களையும்; இரண்டு துரைத்தனங்களையும்; தினசரி, வாரம்மும்முறை வாரம் இருமுறை, வாரம் ஒருமுறை, மாதம் மும்முறை, மாதம் இருமுறை, மாதம் ஒருமுறை, ஆக வெளிவந்து மக்களது அறிவு ஆற்றல்களைப்

பலதுறைகளிலும் காலத்திற்கேற்றவாறு உயர்த்துகின்ற பல பத்திரிகைகளையும்; பிறவற்றையும் பெற்றிருக்கின்றது. இம் மட்டோ அதன்பெருமை? அஃது இவ்வளவோடு நில்லாது வளர்வதற்கும் வளர்ப்பதற்கும் தகுதியாகப் பெருமைபொருந்திய, உலகவழக்கிலுள்ள, பேசுமொழியாகவும் இருக்கின்றது. இங்கு, இதைப்பற்றி பன்னிப்பன்னி பல கூறலாம். எனினும் அங்ஙனம் மிகைபடக் கூறாது, இதனைப்பற்றிச் சில ஆண்டு (1920) களுக்கு முன்னர்த் திருச்சிராப்பள்ளியிலே நடைபெற்ற சென்னை மாகாணத்தின் இரண்டாவது தமிழ்ப்பண்டிதர் பெருங்கூட்டத்தில் அதன் வரவேற்புக்கழகத்தலைவர், ஆண்டுக் குழுமிய புலவர் பலர்க்கும் நல்வரவு கூறுகையில் மொழிந்தவற்றுள், சிலவற்றைக்குறிக்கின்றேன். அவை வருமாறு:—

(தொடரும்)

ஊ. சா. வேங்கடராமையர்.

நம்மாழ்வாரது திருச்சீர்த்தொடை.

(46-ம் பக்கம் தொடர்ச்சி.)

இவ்வாழ்வார் பன்னிருவருள், வேதாந்த தேசிகர் அதிகார ஸங்க்ரஹ முறைப்படியும், மணவாளமாமுனிகள் முறைப்படியும், நான்காமவரும், பின் பழகிய பெருமாள் ஜீயர் முறைப்படியும், நிகமாந்த தேசிகர் பிரபந்தசார முறைப்படியும், ஐந்தாமவரும், பாரசரபட்டர் முறைப்படி பத்தாமவரும், திருவரங்கத்தமுதனார்முறைப்படி பதினொன்றாமவரும்,நாலாயிரப்பிரபந்தமுறைப்படி பன்னிரண்டாமவருமான நம்மாழ்வார் இயற்கையில் ஞான பக்தியும், பிறப்புத் தொடங்கி யிவ்வுலக வுணர்ச்சி நடையாடாமையும், ஒருகால் தோன்றப்பெறுமல் எக்காலும் விளங்கப் பெற்ற தத்துவ ஞானமும் உடையவர். ஆதலின் ஆழ்வார்களுள் இவர் தலைமையுற்று நம் ஆழ்வார் நம் ஆழ்வார் என வியந்து ஓதப்பெற்றார். இவர் அவயவி-அங்கி, ஏனையோர் அவயவம் அங்கம். இங்ஙனம் அங்கியும் அங்கமுமாக உரு

வகப்படுத்துங்கால் இவ்வாழ்வார்க்குப் பூதத்தாழ்வாரை முடியாகவும், பொய்கை பேயாழ்வார்களைக் கண்களாகவும், பெரியாழ்வாரை முகமாகவும், திருமழிசை யாழ்வாரைக் கழுத்தாகவும், குலசேகராழ்வாரையும் திருப்பாணாழ்வாரையும் கைகளாகவும், தொண்டரடிப்பொடி யாழ்வாரை மார்பாகவும், திருமங்கையாழ்வாரை நாபியாகவும், மதுரகவியாழ்வாரைப் பாதமாகவும், நிரூபித்து உரைப்பது மரபு. அன்றியும் இவரை நாராயணனுகக்கொள்ளுமிடத்து அவ்வவ்வாழ்வார்களை அவரது அவ்வவ்வம்சங்களாகக் கொள்ளுக. இவர் திருமால் திருவடிகளுக்கு அந்தரங்கர், அவர் பாதுகையை இவர் பெயரால் வழங்குவர், பாஹ்ய குத்ருஷ்டிகளாகிய சடரை ஒட்டியவர், சடவாயுவைப்பிறந்த பொழுதே உங்காரத்தா லொறுத்தவர்—ஸ்ரீசடகோபர், சடவைரி; பெருமான் அளித்த மகிழ மாலையைத்தரித்தவர்—வகுளாபரணர்; பிறமதங்களை அடக்கி அம்மதயானைகளுக்கு மாவெட்டி போன்றவர்—பராங்குசர்; பாண்டிய நாட்டில் தோன்றிப் பகவத் ஸாக்ஷாத்காரத்தால் உலகநடைக்கு மாறாக விளங்கினவர்—மாறர், இத்தகையினராகிய நம்மாழ்வார் செழியர் நாட்டுப் பொருநையாற்றங்கரையில் திருக்குருகூர்த் திருநகரியில் வேளாளர் வம்சத்தில் தந்தைகாரிப் பிள்ளையும் தாய் உடைய நங்கையும் செய்த அருந்தவத்தால்—நம் குலமும் நாமும் உய்ய, நம்பெருமானது பிரசாதம் நமக்குண்டாக பகவதமிசமும் கௌத்துவாமிசமும் சேனைமுதலியார் அமிசமுமாக=அவ்வமிசங்கள் நமக்குப் புலமையருள-கலியுகம் பிறந்த பின் சங-ம்நாள் பிரமாதி வருஷம் வைகாசி மாதம் பௌர்ணிமி திதியும் விசாக நக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் சுக்ரவாரம் கடகலக்னத்தில் திருவதரித்தனர். திருவனந்தன் ஆகிய திருப்புளிக்கீழ் அமர்ந்தருளிய இவரது திருநாமம் 'திருவழுதிவளநாடன், பொருநைச் சேர்ப்பன் ஸ்ரீபராங்குசமுனிவன், வகுளச்செல்வன், தருவளருங்குருகையர்கோன், காரி மாறன், சடகோபன்', 'திருவாய்மொழிப்பெருமாள் உதயபாஸ்கரன் பொன்னரங்கன் பொன்னடி' என்று புகழப்படும். இவரது

சரித வைபவங்களைப் பிரமாண்டம், பாத்மம், மார்க்கண்டேயம் என்ற புராணங்களிலும், பார்கவம், விருத்த பாத்மம், பிரவிருத்த பாத்மம் என்ற உபபுராணங்களிலும், திவ்ய சூரி சரிதம பிரபந்நாமிருதம் குருபரம்பராப் பிரபாவம் பிரபந்தசாரம் உபதேசரத்தினமாலை என்ற நூல்களிலும் காணலாம்

(தொடரும்)

"சிவப்பிரகாசன்"
தாசி மோகனம்.

(48-வது பக்கத்தொடர்ச்சி.)

அழகியவல்லியும் ஓகோ! அப்படியா என்னவார்த்தைச் சொன்னீர்கள்; நன்றாயிருக்கிறது. இது வரை எல்லோரும் குதூகலமாய்ச்சிரித்து விளையாடிக்கொண்டிருந்துவிட்டுஎங்களை மட்டும் வீட்டிற்குப் போகச்சொல்வது உசிதமாகுமா? எங்களைப் பரீக்ஷைபார்க்கிறீர்கள்போலும். தாங்கள் வந்தால் அன்றி நாங்களும் போகமாட்டோம் என்றனள். அதற்குச் சிவப்பிரகாசன் அளவிலா ஆனந்தமடைந்து, மிகவும் சமாதானஞ் செய்து நாளைக் கட்டாயம் வீட்டிற்கு வந்துசேருகிறேன் உங்களைவிட்டுப்பிரிய எனக்கும் எள்ளளவும்மனமில்லை. ஆகினும் பந்துக்களும் பல பிரமுகர்களும் வந்திருக்குங்காலையில் கூட வருவதென்றால், மனம் பயப்படுகிறது. உங்களைவிட எண் மடங்கு அதிகமாக என்மனம் வேதனையடைகிறது என்றார். மோகனம் எழுந்து நாளை நீங்கள் வருவது நிச்சயமாகில் உங்கள் கைகெடியாரத்தையும் மேல் கொட்டடி உருமாலையையும் எடுத்துப்போகிறேன். நீங்கள் எங்கள் வீட்டிற்குவந்து இதனைத் திரும்ப எடுத்துக் கொள்ளலாமென்றாள். ஆகா சரி என்று அவைகளைக்கொடுத்து அனுப்பிவிட்டு, இவர்படுக்கைக்குச்சென்றும் இவர்களின் ஞாபகத்தால் இரவு முழுதும் நித்திரை இல்லாதிருந்து, காலையில் எழுந்து நித்தியகருமத்தை முடித்தார். இதற்குள் காப்பிசாப்பிடுகிறதற்கு அழைத்தார்கள், இவருக்கோ

அழகியவல்லி வகையறாவைத் தனியே போகச்சொன்னோமே என்னவருத்தப் படப்போகிறார்களோ என்னும் ஏக்கத்தைக் கொண்டிருந்ததால் சாப்பிடமனம் செல்லாது, நேற்றிரவு இனாம் வாங்கினவனாகையால் காத்திருந்த தவசுப்பிள்ளையை அழைத்து இங்குக்காப்பி பலகாரங்களைச் சீக்கிரம் கொண்டுவா என்றார். எஜமானே எத்தனைபேருக்குக்காணும்படிக் கொண்டு வர வேண்டும்? (சிவ) இன்று செய்திருக்கும் பலகாரங்கள் என்ன? காப்பி நல்லதாக இருக்குமா? (தவ) செய்திருக்கும் பலகாரங்களை இத்தனைபேருக்கென்று உத்திரவுகொடுத்தால் ஓரேநிமிஷத்தில் கொண்டுவருகிறேன் பின்பு எனது சாமர்த்தியத்தையும், புத்தியையும் அறிவீர்கள். (சிவ) இதுவும் நமது நல்லகால அறிகுறியே. இவ்வளவு சுறுசுறுப்பும் அன்பும் உடையவனா என தனக்குள் மெச்சி உனக்குத் தக்க உதவி செய்கிறேனென்றுசொல்லிச்சுமார் ஆறுபேர்களுக்குக்காணும்படி கொண்டுவா என்றார் (தவ) அவ்வாறே தயாரித்துக் கொண்டுவந்து தெரிவித்தான். (சிவ) என்னென்னவகைப் பலகாரங்கள் சொல் பார்ப்போம்; (தவ) இட்லி,தோசை, ராவா உப்புமா, சொச்சி, குஞ்சாலாடு, அல்வா, ராவாபொங்கல், சுருள்போளி, பூரி, பிஸ்கோத், மைசூர்பாக், என்றான். (சிவ) உப்பு உறைப்பு பலகாரங்கள் ஒன்றுமில்லையோ என்றார். (தவ) கேட்பீர்கள் என்று எண்ணி, உருளைக்கிழங்குகறி, வெங்காய சாம்பார், தேங்காய்ச் செட்டினி, மிளகாய்ப்பொடி,நல்லநெய், எண்ணை, ஜீனி, தேங்காய்ப்பூ, மலைபழம், மாதுளம்பழம், ஆரஞ்சிப்பழம், வெத்திலை அலகுபாக்கு வகையறாக்களும் கொண்டு வந்திருக்கிறேன். இன்னும் வேண்டியவற்றைத் தெரிவித்தால் இதோ கொண்டுவருகிறேன் என்றான்.

(சிவ)இவைகள் யாவையும் கண்ணுற்றுப்பிரமித்து,இதனை அழகியவல்லிவகையறாக்களுக்கு அனுப்பாது நாம் சாப்பிடுவது முறையாமோ எனத்தனக்குள் எண்ணி, என் செய்வதென்று ஏக்கங்கொண்டு, வெளியே வந்து சுற்றுமுற்றும் பார்க்கையில் நட்டுவ ஜெகன்னாதன் மிக்க வணக்கத்தோடு சமீபத்தில் ஓடி

வந்து கும்பிட்டுப் புன் சிறிப்புடன் நின்றான். (சிவ) தேடப் போன மருந்து காலில் தட்டியதேபோல் வந்தாய் என்று காதிற்படச் சொல்லி, ஜெகன்நாதா என்னவிசேஷம்?
(ஜெக) ஓங்கக்கிருபையால் எல்லாம் சேமமே!! நாங்க எச மானிடமிருந்து உத்திரவு பெற்றுக்கொண்டு போனது முதல் நான் அஙகேயே (அழகியவல்லிவீடு) தானிருந்தேன். விடியற் காலம் வரை ஓங்கபேச்சேதான். (சிவ) என்ன!! என்ன!! என்பேச்சா! அப்பா ஜெகன்நாதா அது விஷயத்தை ஒளி யாது நடந்தபடி சொல் என்றார். (தொடரும்.)

S. T. விகடம்.

விசேஷக் குறிப்புகள்.

நமது நகர் ஸ்ரீ மகாலிங்கேஸ்வார் ஆலயத்து ஸ்ரீ பிரஹத்சுந்தர குசாம்பிகைக்கு ஆடிப்பூர மகோற்சவம் நிகழ்ந்த ஆடி-மீ 10உ துவஜா ரோகணமாகி வழக்கம்போல் செவ்வனே நடைபெற்றது. தீர்த்ததின மாகிய ஷை மீ 19உ இரவு பரிவாரங்கள் தமக்குரியவாகனங்களில் எழுந் தருளிவர, ஸ்ரீ அம்பிகையோடு ஏகநாயகப் பெருமான் மிக்க அலங்காரத் துடன் வெள்ளிரதத்து வீதிவலம் வருங்கால், ஷை தேவஸ்தானம் டிரா ஸ்டியால் செய்திருந்த விமரிசை யாவரும் மெச்சத்தக்கதே.

நமது நகர் சைவசித்தாந்தஸபையின் நான்காவதுஆண்டின்நிறைவு விழா இம்மதி வழக்கம்போல் நடத்த, அதன் அங்கத்தினர்கள் முற்படு வார்களாக.

வெள்ளப் பெருக்கினால் திகைத்துச் சிதறுண்டுவந்த பல ஜனங்க ளுக்கு ஆங்காங்குள்ள பல பிரமுகர்களால் ஆதரிக்கப்பெற்றதாக அறிகி றோம். அவை மிகவும் நன்றிபாராட்டற் பாலதே.

இலங்கை சிங்களர்கள் தங்கள் கோயில்களில் ஓர் உபதேசமடம் ஏற்படுத்தி விசேஷதினங்களில் குருமார்களைக்கொண்டு பல உபதேசங் களைக் கேட்டுவருகின்றனராம். நம் நாட்டிலோ அதற்குரிய மடங்கள் பல இருப்பினும் அக்கலம் பூச்சியமே.

இங்கிலாந்திற்குச் செல்லுபவர் சில கப்பல்களில் மூன்றாவது வகுப்பிலும் செல்லலாமாம்.

தற்போது வந்த வெள்ளத்தில் யானைகளும் பல சந்தனமரங்களும் வந்ததென்றால், அதன் மிகுதியைச் சொல்லவும் வேண்டுமோ. இவ் வெள்ளத்தால் கோடிக்கணக்கான பொருள்கள் பலருக்கும் நஷ்டம் ஏற்பட்டது விசனிக்கத்தக்கதே.

கும்பகோணம் ஸ்ரீ கும்பேஸ்வரர் வடக்குவீதி ஜவுளிக்கடையார்கள் நிகழ்ந்த இம்மதியில் எவ்வருடம் போல் இவ்வருடமும் சுவாமிமலை ஸ்ரீ சுவாமிநாதசுவாமிக்குத் தனித்தனியே மூன்று விசேஷ அபிஷேக ஆராதனைகளைச் செய்தார்கள். அத்துடன் கும்பகோணம் எருமைத் தோல் வட்டம் ஸ்ரீமான் க. வி. ந. பா. கிருஷ்ணய்யர் அவர்கள் முயற்சியின் பேரிலும் ஓர் விசேஷ அபிஷேகம் 24௳ சுக்கிரவாரதினம் நடைபெற்றது. புலியூர் பிரும்மஸ்ரீ நாராயணஸாமி ஐயர் அவர்களின் பில்லாங்குழல் கச்சேரியும் ஸ்ரீ சுவாமிநாதர் ஸந்நிதியில் நடந்தது. அவ்வமயங்களில் அத்தலவாசி திருவாளர் எஸ். சுப்பிரமணியதேசிகர் அவர்கள் முன்னின்று சிறப்பாய் நடத்தியவை மிகவும் பாராட்டத் தக்கதே என ஒருவர் அறிவிக்கிறார்.

சில தினங்களுக்கு முன் செங்கோட்டைக்கருகே பகவதிபுரத்தில் ஒரு பூகம்பம் ஏற்பட்டது, பல கட்டிடங்களும், தந்திமரங்களும், பூமிக்குள் புதைந்துவிட்டனவாம்.

தூமகேது அல்லது ஒருபெரிய வால்நக்ஷத்திரம்.

அதன் வருகை.

ஒரு விசேஷ நிருபர் எழுதுகிறார்.

இவ்வருஷம் செப்டம்பர் ௴க்குமேல் டிசம்பர் ௴க்குள் ஓர்பெரிய வால்நக்ஷத்திரம் தோன்றப்போகிறதாம். அதனால் உலகத்தில் விசேஷ மாறுதல்கள் உண்டாகி, பின்பு பல சௌகர்யங்கள் உண்டாகுமாம். பூமியின் பருமன் பெருக்குமாம். பூபாகம் அதிகரிக்குமாம். காலவரையில் மாறுபாடுகள் ஏற்படுமாம். பூமி தன்னைததானே ஒருதரம் சுற்ற 30-மணி நேரம் செல்லுமாம். வருஷம் ஒன்றுக்கு 40-நாட்கள் அடங்கிய 10 மாதங்களாகக்கணக்கிடப்படுமாம். மாதம் ஒன்றுக்கு 5 வாரமாம் வாரம் ஒன்றுக்கு எட்டு நாளாம். அப்புதிய கிழமைக்கு ப்ரம்மவாரமாம் இக்காலம் முதல் 'அதீதபிரமகல்பம் என்னும் புதியகல்பமும், 'சூரிய சாவர்ணி' என்னும் புதிய மன்வந்தரமும் ஆரம்பமாகுமாம். நம் பெருமானே இக்காலம் முதல் இவ்வுலகை கைலாஸவாஸமாகக் கொண்டு பிரத்தியக்ஷபூர்வமாக ஜனங்களுக்குக்காக்ஷிகொடுத்தருளப்போகிறாராம்.

விளம்பரம்.

அச்சில் இருக்கின்றன. சீக்கிரம் வெளிவரும்.

உ த் த ம ர் ச ரி த ம்.

மலர்கள் 1,2,3,4,5.

இப் புஸ்தகங்கள் எலிமெண்டரிஸ்கூல்களுக்காக புதிதாய் தயாரிக்கப்பட்ட ஸிலபஸை அநுசரித்து முறையே 1,2,3,4,5 வகுப்புகளுக்குத் தகுதியாயிருக்கும்படி நவீன போதனாமுறையில் அநுபவமுள்ளவர்களால்எளியநடையில் எழுதப்பெற்றவை. இதிஹாஸபுராணங்களில் உள்ள நீதிக்கதைகளும், மேதாவிகளின் ஜீவியசரித்திரங்களும் அடங்கியவை.

இதா விபரங்களுக்கு "குணநிதி" பத்திராதிபருக்கு எழுதவும்.

முக்கிய அறிவிப்பு.

பல அறிஞர்களால் குறிக்கப்பட்ட அருங்குணமுடையார்க்கே நமது "குணநிதி" யை அனுப்பினேம். அவ்வாறே பலர் அதன், முற்பொருளாகிய குணத்தைக்கொண்டு, பிற்பொருளாகிய சந்தா தொகையை அனுப்பி நம்மை உத்ஸாகப்படுத்தியுள்ளார்கள். அவர்களின் நன்றியை என்றும் மறவோம்.

மேலும், சிலர் தங்கள் நண்பர்களும் "குணநிதி"யையுடையவர்களாகத் தக்காரென்றும், பத்திரிகையை அனுப்பும்படிக்கும் எழுதியுள்ளார்கள். அவ்வாறே அன்னார்களுக்கும் முதல் மூன்று சஞ்சிகைகளையும் அனுப்பியுள்ளோம். அவர்களும், தங்கள் நண்பர்களைப்போலவே குணநிதியை ஆதரித்து நம் தாய்மொழியின் க்ஷேமத்தைக் கருத முற்படும் வண்ணம் இறைவன் அருள்புரிவாரெனவே நம்புகிறோம்.

இதுவரை சிலர் சந்தா தொகையை அனுப்பாமலிருந்து வருகிறார்கள். அவர்கள் இம்மாதம் 30க்குள் அனுப்பிவிடுவார்களென நம்புகிறோம் வேலைத் தொந்தரவினாலோ, இதர அசௌகரியங்களினாலோ மேற்குறித்த தேதிக்குள் சந்தா தொகையை அனுப்பாத மெம்பர்களுககு நான்காவது சஞ்சிகையை வீ. பி. போஸ்டுமூலமாக அனுப்ப உத்தேசித்திருக்கிறோம் நண்பர்கள் வீ. பி யைப் பெற்றுக்கொண்டு "குணநிதி" யை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

பத்திராதிபர்.

நமது குணநிதிப் பிரசுரசாலையில் அடியிற்குறித்துள்ள செந்தமிழ் நூற்கள் விலைக்குக் கிடைக்கும்.

திருவிடைமருதூர் ஸ்தலபுராணம். (வசனம்)	ரூ.	1—0—0
தொல்காப்பியம் பொதுப்பாயிரம் மூலமும் உரையும் (பழைய உரை)	ரூ.	0—4—0
பத்திரஸ பைந்தமிழ்ப் பாசுரக்கீர்த்தனை.		0—4—0

குறிப்பு:— நமது சந்தாதாரர்களுக்கு மூன்று நூற்களும் ஒன்றேகால் ரூபாய்க்கே கொடுக்கப்படும்.

[வி. பி. செலவு பிரத்தியேகம்.]

Publisher:— M. S. Pichaiya Desikar, Thiruvidaimarudur.
Printer:— V. Srinivasa Thathachariar, S. K. Press, Kumbakonam.